# திருக்குறள்

**5. அன்பிற்கும் உண்டோ அடக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண்ணீர் பூசல் தரும்.**

பொருள் :

அன்பை மனத்துள் பூட்டி வைக்க முடியுமோ? அவரது சிறு கண்ணீர் துளி, உள்ளே இருக்கும் அன்பைப் பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்.

**6. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்**
**என்பும் உரியர் பிறர்க்கு.**

பொருள் :

அன்பு இல்லாதவர்கள் எல்லாப் பொருள்களையும் தமக்கே உரிமையாக்கிக் கொள்வர். அன்புடையவர்கள் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வார்.

**7. இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்ப காய்கவர்ந் தற்று.**

பொருள் :

இனிய சொற்கள் அதிகமாக இருக்க அதைத் தவிர்த்துக் கடுமையாகப் பேசுவது, கனிகள் நிறைந்திருக்க அவற்றை விட்டுக் காய்களைப் பறித்துண்பதற்கு நிகராகும்.

**8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**
**அன்றே மறப்பது நன்று.**

பொருள் :

ஒருவர் செய்த உபகாரத்தை மறப்பது தருமமாகாது. ஆனால் அவர் செய்த தீமையை அப்போத மறந்து விடுதல் அறமாகும்.

www.kids.noolagam.com